Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 68/2020**

**Deposition of PW.5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வில்லியம் பிரான்சிஸ் | ஜாதி | : | |
| த/பெ | : | மரிய ஆரோக்கியம் | தொழில் | : | வனவர் (ஓய்வு) |
| கிராமம் | : | திண்டுக்கல் | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் கிழக்கு | வயது | : | 73 /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.12.2025.

(எதிரிகள் A3 to A5, A7 ஆஜர் ,எதிரிகள் A1, A2, A9, A10, A11, A14 ஆஜர் இல்லை. U/s. 317 crpc petition filed and allowed)

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு வனத்துறையில் வனவராக வேலை பார்த்து ஓய்வு பெற்று திண்டுக்கல் மாவட்டம் , திண்டுக்கல் கிழக்கு தாலுகா , வடுக மேட்டுராஜக்காபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கடந்த 27.02.2004 ஆம் ஆண்டு கன்னிவாடி வனச்சரகத்தில் அரசமரத்துப்பட்டி பீட்டில் வனக்காப்பாளராக வேலை பார்த்துக் கொண்டிருந்த போது அன்றையதினம் மதியம் சுமார் 01.00 மணியளவில் எங்களது வனச்சரக அலுவலர் தனிப்பணிக்குழு பணிக்கு செல்லவேண்டியிருப்பதால் வனச்சரக அலுவலகத்திற்கு வருமாறு அழைத்தார். நான் அன்று சுமார் 01.30 மணியளவில் வனச்சரக அலுவலகத்திற்கு வந்து விட்டேன், எங்களது வனவர் பிச்சை அவர்களின் தலைமையில் எங்களது வனச்சரக அலுவலரின் உத்தரவின் பேரில் 11 பேர்கள் கொண்ட குழுவுடன் மற்றும் புகார் கொடுத்த தோட்ட உரிமையாளர் ராஜாராமும் அவருடைய தோட்டக்காவலருடன் தோணிமலைப்பகுதியில் ராஜாராமின் சொந்த பட்டா நிலத்தில் ஆஜரிலுள்ள எதிரிகள் மற்றும் பலரும் தோதகத்தி மரங்களை வெட்டி துண்டு போட்டு 28 கட்டைகள் செதுக்கிய நிலையில் இருந்தது. 2 உருட்டுக் கட்டைகள் கட்டைகள் முழுமையாக இருந்தது. 7 வெட்டப்பட்ட முட்டுக்கள் இருந்தன. அப்போது அங்கிருந்த எதிரிகளை பிடித்து விசாரித்தோம். அதில் ஆஜர் எதிரியான அந்தோணியை அன்றைய தினம் 05.15 மணிக்கு நான் விசாரித்த போது

அவர் என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதை நான் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.அ. 19 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதே இடத்தில் வைத்து மற்றொரு எதிரியான தேவசகாயம் என்பவரை விசாரித்த போது அவர் என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதை நான் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.அ. 20 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த இடத்தில் எதிரிகள் வெட்டுவதற்கு பயன்படுத்திய 2 ரம்பம், 2 கோடாரிகள்,1 அருவாள் ஆகியவற்றை கைப்பற்றினோம். அந்த இடத்தில் வெட்டப்பட்டு கிடந்த 7 வெட்டு மொட்டுக்கள், 28 செதுக்கப்பட்ட கட்டைகள், 2 உருட்டுக்கட்டைகள் ஆகியவற்றை அந்த இடத்தில் வைத்து எங்களது வனவர் பிச்சை என்பவர் கைப்பற்றி ஸ்தல மகஜர் தயார் செய்தார். அந்த ஸ்தல மகஜரில் சாட்சியாக நான் கையெழுத்து செய்தேன். என்னிடம் காட்டப்படும் ஸ்தல மகஜரில் சாட்சியாக போடப்பட்டுள்ள கையெழுத்துகளில் என்னுடைய கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.21 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதே இடத்தில் வைத்து வனவர் பிச்சை கைப்பற்றிய பிடிபொருட்களை அந்த நிலத்தின் உரிமையாளர் ராஜாராம் என்பவரிடம் ஒப்படைத்து அவரிடம் ஒப்புகை கடிதம் பெற்றார். பின்னர் இவ்வழக்கின் எதிரிகளையும், எதிரிகள் பயன்படுத்திய பிடிபொருட்களையும் கன்னிவாடி வனச்சரக அலுவலகத்திற்கு கொண்டு வந்தோம். அன்று இரவு சுமார் 09.00 மணியளவில் இவ்வழக்கின் மற்றொரு எதிரியான பாண்டி என்பவரை நான் விசாரித்த போது அவர் என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை நான் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலம் **அ.சா.ஆ.22** ஆக குறியிடு செய்யப்படுகிறது. அன்றைய தினம் இரவு இவ்வழக்கின் எதிரிகளை எங்களது அலுவலகத்தில் பாதுகாப்பாக வைத்து விட்டு மறுநாள் கனம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினோம்.

**குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor